*International Journal of Linguistics and Computational Applications (IJLCA)* ISSN 2394-6385 (Print)
*Volume 3, Issue 1, January – March 2016* ISSN 2394-6393 (Online)

# தனிப்பாடல்கள் மரபும் மாற்றமும்

பூ.சங்கரி

*முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், மெரினா வளாகம்,சென்னை.05*

தமிழின் செவ்வியல் இலக்கியமாகச் சிறப்பித்துப் பேசப்படும் தொன்மையான சங்க இலக்கியங்கள் தனிப்பாடல் களாகவே காணப்படுகின்றன. பாடல்களின் அடியளவில் நெடியதாகவும் குறுகியதாகவும் நடுநிலையதாகவும் அவற்றை அளவு கருதி வகைப்படுத்தினாலும் பாடல்களின் புலப்பாட்டுப் பொருண்மைத் தன்மையில் தனிப்பாடல்களாகவே கூறப்படும் பாங்கில் அமைந்துள்ளன. இப்பின்புலத்தில் தனிப்பாடல்களின் மரபும் மாற்றமும் குறித்து இக்கட்டுரை ஆய்வுசெய்கிறது.

தொல்காப்பியத்தில் செய்யுளியல் (நூற்பா-1) செய்யுளியல் உறுப்புகள் பற்றி கூறும் போது மாத்திரை, எழுத்தியல், அசைவகை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடைவகை, நோக்கு, பா, அளவியல், திணை, கைக்கோள், கூற்றுவகை, கேட்போர், களன், காலவகை, பயன், மெய்ப்பாடு, எச்சவகை, முன்னம், பொருள், துறைவகை, மாட்டு, வண்ணம் என இருபத்தாறினை ஒரு கூறுப்படுத்தியும் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு ஆகிய வனப்பு எட்டினையும் வேறு கூறாக்கி ஆக 34 செய்யுள் உறுப்புகளும் தனிநிலை, தொடர்நிலை செய்யுளுக்கு உரிய உறுப்புகளாகும் எனக் கூறுகிறது.

‘அடிநிமிர் கிளவி யீராறாகும்’
(தொல்.செய்யுளியல், நூற்பா.182)

‘அடிநிமிர்வு’ என்பதற்கு அடிப்பெருக்கம் என்றே பொருள் கொள்கின்றனர் உரையாசிரியர்கள். எனவே, பல செய்யுட்கள் தொடர்வது என்றோ பொருட்றொடர்நிலை என்றோ பொருள் கொள்ளவில்லை. இவ்வாறு அடிகள் பல தொடர்ந்து வருவது தனிநெடும்பாடல் எனலாம். இத்தனி நெடும்பாடலும் தனிப்பாடலாகும். ஆகவே, தொல்காப்பியர் காலத்தில் பாட்டு என்பது தனிச்செய்யுளாக கருதப்பட்டுள்ளது. தொன்மையான இலக்கியமான சங்க இலக்கியங்கள தனிப்பாடல்களாகவே இருப்பதால் இத ன் தனிப்பெருநிலையை உணர்ந்து கொள்ளலாம்.

கி.பி.12 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் அணி இலக்கண நூலாகிய தண்டியலங்காரம் செய்யுள் வகைகளை பின்வரும் பிரிவுகளில் அடக்குகின்றது. முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை எனவும் (பொதுஅணியியல்,நூற்பா.2) அவற்றுள் ‘முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும்’ (பொதுஅணியியல், நூற்பா.3) முத்தகச் செய்யுள் என்பது தனியே நின்று ஒரு பொருள் தந்து முற்றுப்பெறும் எனவும் விளக்கம் கூறுகிறது. இத்தனிப் பாடலை தனியன், முத்தகம், தனிநிலை, தனிநிலைச்செய்யுள் என்னும் பல்வேறு பெயர்களில் இலக்கண உரையாசிரியர்கள் கையாண்டுள்ளனர். ஏனெனில், பாடல் என்ற அளவிலேயே தனிப்பாடல் மட்டுமே முற்காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சங்கஇலக்கியம்

தனிப்பாடல்களின் தொடக்க காலமாக சங்க காலத்தையே குறிப்பிட வேண்டும். சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் தொகுக்கப்படுவதற்கு முன்பு தனிப்பாடல்களாகவே இருந்தன.

திணைக்கோட்பாட்டை அடித்தளமாக கொண்டு கட்டமைக்கப் பட்ட இச்சங்க பாடல்கள் உலகவழக்கு, நாடகவழக்கு என்ற இரு தழுவு நெறியையும் பின்பற்றி அகம், புறம் என்ற தமிழ் மக்களின் வாழ்வியலை மட்டும் எடுத்தியம்பாமல் அக்கால இலக்கிய செம்மையையும் எடுத்து காட்டவல்லனவாய் அமைந்துள்ளன. பல்வேறு பகுதிகளில் பாடப்பட்டனவாக கருதப்படும் இச்சங்க பாடல்களின் காலம் குறித்து பல்வேறு கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும் பண்டைய உரையாசிரியர்கள் கடைச் சங்க காலத்தில் பாடப்பட்டவை எனக் கொள்கின்றனர். (அறியப்படாத தமிழ் உலகம், ப.131)

தமிழகத்தில் கிடைக்கின்ற கி.மு.4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தொல்லியல் சான்றுகளான கல்வெட்டுகள், புழங்கு பொருட்கள், நாணயங்கள், பாறையோவியங்கள், குறியீடுகள் சங்கப்பாடல்களோடு ஒத்துச்செல்வதை வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இதனைக் கொண்டு பாட்டும் தொகையுமான இதன் காலம் கி.மு.4 முதல் கி.பி.250 வரையிலான விரிந்த கால எல்லைக்குள் பாடப்பட்டவை என நவீன ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

இத்தகைய சங்கப் பாடல்கள் தமிழ்ச் சமூகத்தின் பல்வேறு வளர்ச்சி வரலாற்றைப் பதிவு செய்துள்ளன. மொழியால் கலையாக்கம் பெற்ற இப்பாடல்களை அகம், புறம் என வகைப்படுத்தியது தொல் இலக்கண மரபு. இப்பின்புலத்தில் உருவான பாடல்கள் பல்வேறு முறைமைகளில் பாடப்பட்டத்துடன் பல்வேறு மரபுகளிலிருந்து உருவாகியுள்ளதை ஆய்வுகள் மூலம் அறிய முடிகின்றன.

இதனை தமிழ்ச் சமூகத்தின் புராதானமான இனக்குழுச் சமூகங்களின் கலாச்சாரத்தின் அங்கமாக விளங்கிய பாணர் மரபும், அவற்றிலிருந்தும், அவற்றை விஞ்சியும் வன்முறைகளால் உருவான வேந்தர் முடியாட்சி சமுதாயமும், அதன் அங்கமாகிவிட்ட புலவர் மரபும் தனித்துவமானவையாக இயங்கின. குறிப்பாகப் பாணர் மரபு உருவான திணைவாரிக் குடிச் சமூகம் மூலதமிழ் (மூலதிராவிடம்) நாகரிகத்தையும் கலாச்சாரத்தையும் கொண்டிருந்தன என்னும் ராஜ்கௌதமனின் கூற்றின் வழியே அறியமுடிகிறது. (தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், ப.27)

இத்தகைய மூலபாணர் மரபும், அதனை உட்செறிந்த புலவர் மரபும் இங்கே தமிழ் மரபாக கொள்ளப்படுகின்றன. பாணர் மரபு அகம், புறம் என்ற பொருள் மரபை தம் பாடல்களின உட்பொருளாக கொண்டமைத்தனர். இத்தகைய இருமரபுகளும் தங்களுக்குள் இணைந்துள்ளதை சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றன.

குறிப்பாக, தமிழின் தனித்துவமான இலக்கிய மரபான அகம், புறம் என்பது சமயச் சார்பற்றதும் மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டதுமான பாடல் மரபேயாகும். இதில் பாணர் மரபு என்பது ஆடல், பாடல், சடங்கு, வழிபாடு, மந்திரம், பரிகாரம், மருத்துவம் ஆகியவை ஒருங்கிணைந்த வாய்மொழிப் புனைவு வெளிப்பாட்டில் உணவும் பாலியலும் இணைந்து அகபுறக் கலவையாக கட்டமைந்திருந்தன.

சங்க இலக்கியமான எட்டுத்தொகையின் தொகையாக்கத்தில் மூவகைப்பட்ட மரபுகள் இருந்துள்ளன. குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு எனும் மூன்றும் அடியளவு, பாடல் எண்ணிக்கை அடிப்படையில் தொகையாக்கம் செய்யப்பட்டவை. இவற்றில் ஐந்திணைப் பாடல்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. பதிற்றுப்பத்து,

புறநானூறு, ஐங்குறுநூறு இவற்றுள் திட்டமிட்டுப் பாடப்பட்ட தொகைகளாக பதிற்றுப்பத்தும், ஐங்குறுநூறும் உள்ளன. அகம், புறம் என்ற இரண்டையும் ஒரு வரையறைக்குள் அடக்கும் போக்கு இவற்றில் காணப்படுகிறது. கலித்தொகையும் பரிபாடலும் இவை இரண்டும் மக்கள் சார்ந்த பாடல் மரபுகளாக உள்ளன.

சங்க இலக்கியத்தில் இனக்குழு சமுதாயம், நிலவுடைமைச் சமுதாயம் என இரண்டையும் காணலாம். சங்க இலக்கியங்களில் புறநானூறு, முல்லைப்பாட்டு ஆகிய நூல்களில் குறிஞ்சி நிலம் சார்ந்த குறுநில மன்னர்களின் வாழ்வின் எச்சங்களைக் காணமுடியும். (ஓரி, அதியமான், ஆயண்டிரன், பேகன் போன்றவர்கள் இதற்கு சான்று) இத்தகைய சமுதாய, கால வேறுபாடுகளை வரையறுத்துக் கொள்ளச் சங்க இலக்கியங்களின் மொழிநடை, வாழ்க்கை நடைமுறைகள், பண்பாட்டு வேறுபாடுகள், வழிபாட்டு மரபுகள், தொன்மங்கள் பேரளவில் துணைப்புரிகின்றன.

## அறஇலக்கியம்

சங்க கால இலக்கியத்தின் தொடர்ச்சியாக நமக்கு கிடைப்பவை சங்க மருவியகால நூல்களான அறஇலக்கியங்கள், காப்பியங்கள் ஆகும். சங்கப் பிற்காலமாகக் கருதப்பெறும் கி.பி.3 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் களப்பிரர் ஆட்சி தமிழகத்தில் தொடங்குகிறது.

சங்ககால மொழிச்சூழலமைவிலிருந்து களப்பிரர் காலந்தொட்டு வரும் காலப்பகுதிகளின் மொழிச்சூழல்கள் வேறுபட்டுள்ளன. களப்பிரர் காலந்தொட்டு வடமொழி செல்வாக்கு பெற்று விரிவடைந்தே வந்துள்ளது. இலக்கிய உருவாக்கத்திலும் வடமொழி இலக்கியத்தாக்கம் அதிகமாக இருந்துள்ளது. பாலி, பிராகிருதம், சமஸ்கிருதம் என்பன இவர்கள் கால மொழியாக அமைந்திருக்க வாய்ப்புள்ளது. (தமிழ்ச் செவ்வியல் படைப்புகள் கவிதையியல் சமுதாயவியல் நோக்கு, ப.59)

களப்பிரர் காலத்தில் காவிரிப்பூம்பட்டினம், காஞ்சிபுரம்பௌத்த மையங்களாக இருந்துள்ளன. இவர்களின் வணிக மொழி பிராகிருதம் ஆகும். இக்காலகட்டங்களில் வடமொழி செல்வாக்கு பெற்றுள்ளதை மணிமேகலை காப்பியத்தில் வடமொழிக் கலப்பை மிகுதியாக பயன்படுத்தியிருப்பதன் மூலம் அறியமுடிகிறது.

கி.பி.470 ஆம் ஆண்டில் வச்சிரநந்தி என்ற சமணமுனிவர் ‘திராவிடசங்கம்’ ஒன்றை நிறுவியுள்ளார். இச்சங்கத்தார் இருண்டகாலத் தமிழ் மக்கள் தம் பண்டை அறவொழுக்கங்களைப் போற்றி அவற்றின் வழியே நல்வாழ்க்கை நடத்தச் சிறுசிறு நீதி நூல்களை எளிய வெண்பாக்களில் எழுதி வெளியிடலாயினர். அவ்வாறு தோன்றிய நீதிநூல்களே பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகும் என எம்.ஆர். அடைக்கலசாமி கூறுகின்றார். (தமிழ் இலக்கிய வரலாறு, ப.112)

இதில் உள்ள பாடல்களைப் பாடும் மரபிலும் சங்கமரபு பின்பற்றப்பட்டுள்ளது. திருக்குறள், நாலடியார் போன்றவை ஒவ்வொரு தலைப்பிற்கும் 10 பாடல்களைப் பாடுவது எனும் அடிப்படையில் அமைந்துள்ளன. நாலடியார், பழமொழி போன்றவை 400 பாடல்களைக் கொண்டனவாக ஆக்கம் பெற்றிருப்பதைச் சங்கமரபின் தொடர்ச்சியாகவே காணவேண்டும்.

தமிழ் மரபில் அகம், புறம் என்ற சங்க இலக்கியத்தின் மூலப்பொருள் மரபின் இரு கிளைகள் ஆகும். பதினெண் கீழ்க்கணக்கில் அறம், பொருள், இன்பம் என்னும் புதிய அறமரபின் பிரிவுகளாக அமைகின்றன. இவற்றுக்கு தர்மம், அர்த்தம், காமியம் என்னும் ‘திரிவர்க்கம்’ வடமரபில் உள்ளன.

வடமரபின் ‘திரிவர்க்கம்’ தமிழில் அறம், பொருள், இன்பம் என்று வழங்குவதோடு ‘சதுர்வித புருஷார்த்தம்’ என்ற நால்வகை உறுதிப்பொருட்களில் எஞ்சிய ‘மோக்ஷம்’ என்பது சங்கஇலக்கியத்தில் ‘வீடு’ எனப்பெயர்த்து வழங்கப்படவில்லை. அது சங்கம் மருவிய காலத்தில் வழங்கியது. ஏனெனில், வட மரபின் ‘மோக்ஷத்துக்கு’ இணையான சமய வகைப்பட்ட கருத்தாக்கம் சமூகத்தில் இல்லையென்றே கூறிவிடலாம் என ராஜ்கௌதமன் தம் கருத்தை முன் வைக்கிறார். (தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், ப.29)

இக்கீழ்க்கணக்கு நூல் புலவர்கள் இம்மூன்று மரபையும் பின்பற்றி பாடல்களை உட்செறிந்து புனைந்துள்ளார்கள். ஆகவே பொருள், இளமை, இன்பம், வாழ்நாள் நிலையாமைகள் பற்றிய இலக்கியப் புனைவுகளுக்கு வடமரபின் சமண பௌத்த அறங்களின் தாக்கங்கள் ஓரளவிற்கு காரணமாக இருந்துள்ளன.
இக்காலகட்டத்தில் எழுந்த நாலடியார் மட்டுமே தொகுக்கப்பட்ட நூலாக இருக்க ஏனையவை தனித்தனி ஆசிரியர்களால் பாடப்பட்ட தனித்தனி நூல்களாகவே அமைந்துள்ளன. இவை பெரும்பான்மை சமணப் படைப்புகளாகவே இருந்துள்ளன. இவை மக்கள் வழக்கில் தொடர்ந்து இருந்து வந்தமைக்கும் பாதுகாப்பாக வைத்தமைக்கும் சமண, பௌத்த வழிப்பட்ட கல்வி சூழலே காரணமாகும். இக்காலத்தில் தோன்றியவை அறத்தை விளக்கும், விவரிக்கும், வாதிக்கும் அறநூல்கள் (Moral Treatises) அல்ல. அறம் போதிக்கப்படுவதற்கான நூல்கள் தோன்றுவதே முக்கியமான பண்பாகக் கொள்ளப்படல் வேண்டும் என்ற கா.சிவத்தம்பி அவர்களின் கருத்து இணைத்து பார்க்கத்தக்கது (தமிழில் இலக்கிய வரலாறு, ப.200)

குடும்பம், அரசு என்னும் இரண்டையும் இவ்விரண்டும் சார்ந்த சமுதாயத்தை நன்னிலையில் வைத்துக் கொள்வதற்கான அறநெறிகளைப பேசுவனவாக இரண்டையும் ஒரு கட்டமைப்புக்கு கொண்டுவர படைக்கப்பட்டனவாக அறஇலக்கியங்கள் உள்ளன.

## பக்தி இலக்கியம்

சங்க மருவிய காலத்தில் அரசியல் போராட்டங்களும் மதப்போராட்டங்களும் நாட்டில் அமைதியற்ற சூழலை ஏற்படுத்தியதால் சமணமும் பௌத்தமும் மிகுந்த எதிர்ப்புக்கு உள்ளாகின. இக்காலகட்டத்தில் வைதீக மேலாண்மைக்கான காலச்சூழல் தொடக்கம் பெற்றன. இக்காலத்தில் உருவான இலக்கியங்கள் பக்தி இலக்கியங்களாகும். சமணத்தைப் பேணிப்பின்னர் சைவத்துக்கு மாறிய பல்லவர் காலகட்டம் கி.பி.250 முதல் கி.பி.890 வரையிலான காலப்பகுதியாகும். பிற்கால பல்லவர் காலத்தில் களப்பிரர் கால ஆளுமை செலுத்திய சமணம், பௌத்தம் அழியத் தொழிக்கப்படுகின்றன.

மகேந்திரவர்மன் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறிய காலப்பகுதியில் சமணப்பள்ளிகளை அழிந்து சமணர்களை வெளியேற செய்தனர். முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் களப்பிரர் அரசு அழிந்தது. இரண்டாம் நரசிம்மவர்ம பல்லவன் காஞ்சியில் ‘கைலாசநாதர் கோயிலை’ கட்டி சைவமேலாண்மையை ஆதிக்கம் பெறசெய்தான்.

பல்லவர் காலம் அரசு ஒழுங்கமைப்பும் நிர்வாக ஒழுங்கமைப்பும் கொண்ட காலமாக காணப்படுகிறது. இலக்கியம் கடவுளை மையப்படுத்தியதாக இறைவழிபாட்டு மரபின் பரவலாக்கத்திற்கு உரியதாக மாற்றம் பெற்றுள்ளன.

இலக்கிய வெளிப்பாட்டைப் பார்க்கும் போது சங்ககாலத்திற் காணப்படாத அவ்விலக்கியங்களிலிருந்து எதிர்ப்பார்க்கப்பட முடியாத ஒரு புதிய மரபு அதாவது வைதீக இந்து மதத்தினரின் மனங்கவர்வதாக உள்ள இலக்கிய மரபு மேற்கொள்வதைக் காணலாம்.

(பண்டையத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம், ப.85)

பல்லவ அரசமைப்பு, நாட்டு நிர்வாகம், வேளாண்மை, மேலாண்மை ஆகியவற்றுடன் சமண எதிர்ப்பு காலமாகவும் சைவமதம் ஆளுமை பெற்ற காலமாகவும் அமைந்துள்ளது. மதம் மிக முக்கிய ஸ்தாபனமாக அமைந்து ஆளுமை செலுத்திய காலமாக இக்காலம் அமைந்துள்ளது.

மதங்கள் முழுக்க முழுக்க அரசு சார்ந்த நிலையினவாக மாறிப்போவது சங்ககாலந்தொட்டு நிகழ்ந்தாலும் பக்திகாலமே மதத்தின் அரசாதரவுக்கான உச்சகட்ட காலமாக இருந்துள்ளது. இக்காலத்தில் சைவம், வைணவம் சமயஞ்சார்ந்த இயக்க காலமாக மதத்தைப் பொது மக்கள் மத்தியில் மிகத் தீவிரமாக வளர்த்தெடுத்த காலமாக, அரசனையே மதம் மாற்றிய காலமாக அமைந்துள்ளது. அரசனையே தன் ஆளுமைக் கீழ்க்கொண்டு வந்த மதங்கள் வழிப்பட்ட சமுதாயம் இறைவனையே முழு முதல் தலைவனாக ஏற்றுக் கொண்ட காலமாக பக்திக்காலம் மாற்றமடைந்துள்ளது. அனைத்து தரப்பினரையும் சைவசமயத்திற்கு மாற்றியது பக்திஇயக்கமாகும்.

இக்காலத்தில் அப்பர், திருஞானசம்மந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் தம் பாடல்களில் சிவவழிபாடே அனைத்து நன்மைகளுக்கும் மூலம் எனக் காட்டி உள்ளார்கள். எல்லா வற்றையும் இறைவனாகவே கண்ட பக்தி இயக்கம் இறைவழிபாடு ஒன்றே மக்கள் எல்லா வற்றையும் அடையும் வழி எனக் கொண்டது. பக்தி இயக்கத்தில் இசை முக்கியத்துவம் பெற்றது. பல்லவர் காலத்தில் இசையும் நடனமும் கோயில்களில் வளரத்தொடங்கின. இலக்கியம் இசை வழிப்பட்டதாகவே படைக்கப்பட்டுள்ளது.

இக்கால பக்தி பாடல்களில் உணர்ச்சிநிலை, மிகைகற்பனை, இயற்கையிறந்த நிகழ்வு, புனைவு முதலியவை முன்னெடுக்கப் படுகின்றன. பக்திகாலத்தில் அறிவு, உணர்வு எனும் இரண்டையும் கடவுள் என்ற ஒன்றை நோக்கியதாக மாற்றப்பட்ட நிலையில் இறைவழிபாட்டு மரபுகளைப் பேணுவதே மனிதக் கடமை ஆகிப்போகின்றது. இப்பக்தி இயக்கத்தின் எழுச்சி தமிழுக்கு முக்கிய இடம் ஏற்பட வழிவகுத்துள்ளது.

## தனிப்பாடல்திரட்டு

தமிழ் மொழியில் சங்ககாலம் தனிப்பாடல்களின் தலைப்புக்காலமாக இருந்துவந்தது. அறஇலக்கியங்களும், காப்பியங்களும், பக்தி இலக்கியங்களும், பிரபந்தங்களும் சங்க காலத்திற்குப் பிறகு இலக்கியக் காலகட்டங்களை உருவாக்கின. பிரபந்தங்கள் பெருகி வந்த காலத்தில் தனிப்பாடல்கள் புனையப்படும் காலம் உருவாகின என்பதை இலக்கியத்தில் காணமுடிகிறது.

பிற்காலப் புலவர்கள் நூல்கள் பல யாத்தாலும் தனித்தனியாகப் பாக்கள் பலவற்றையும் இயற்றினர். அவை அவர்களால் இயற்றப்பெற்ற நூலைவிடத் தனிச்சிறப்பு வாய்ந்தவை. ஏனென்றால், அவை அவர்களின் தனிப்பட்ட உள்ளப்போக்குகளை, விருப்பு வெறுப்புகளைத் தெளிவுப்படுத்துவன. கவிஞர்களின் உண்மையான உள்ளப்போக்கை அறிந்து கொள்வதென்பது எவ்வளவு சுவையானது. (தனிப்பாடல் திரட்டு, முன்னுரை, ப.3)

இது தனிப்பாடல்களில் உள்ள புலவர்களின் தற்சார்புத் தன்மையே அவற்றைச் சிறப்புடையனவாக ஆக்குகின்றது என்பதை எடுத்துரைக்கின்றது. தனிப்பாடல் திரட்டில் சங்ககாலக் குறுந்தொகைப் பாடல் முதலாக இருபதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட பாடல்கள் வரை பல்வேறு காலங்களில் புனையப்பட்ட பாடல்கள் காணப்படுகின்றன. கி.பி. 10,11,12 ஆம் நூற்றாண்டுகளில் மெல்ல தோன்றிய தனிப்பாடல்கள் நாயக்க மன்னர்கள் தமிழகத்தில் ஆட்சி பெற்ற காலமாகிய கி.பி.14 முதல் கி.பி18 ஆம் நூற்றாண்டு வரையில அதிகமான பாடல்களைப் புலவர்கள் பாடியுள்ளனர்.

நாயக்கர் காலம் முதலாகத் தமிழ்நாட்டில் பேரரசர்கள் ஆட்சி அழிந்து சிற்றரசர்களும், பாளையத்தார்களும், நிழக்கிழார்களும் ஆங்காங்கே தோன்றினர். இக்காலத்தில் அயல்நாட்டினர் நுழைவும் குறுக்கீடும் நேர்ந்து நாடு முழுமையும் போர்களும் கலகங்களும் ஏற்பட்டன. இந்த வரலாற்றுப் பின்னணியில் தமிழகத்துப் பண்பாட்டுச் சூழ்நிலையை ஆராயும்போது மொழி வளர்ச்சி பற்றி அறியமுடிகிறது. இதன் வழியாக இலக்கியப்போக்குப் பற்றிய கணிப்பும் எளிதாகிறது.

பேராதரவு வழங்கிய பேரரசுகள் வீழ்ந்துவிட்டதால் புலவர்கள் தம்மை நன்கு புரப்பவர் இன்றித் தடுமாற்றம் அடைந்தனர். சமூகச்சீரழிவும் அரசியல் குழப்பங்களும் காப்பியங்கள் தோன்றுவதற்கு இடந்தராமையால் புலமை வெள்ளம் சிறுசிறு பிரபந்தங்களிலும் தனிப்பாடல்களிலும் தேக்கம் கொண்டன. இத்தகைய தனிப்பாடல்கள் தோன்றிய நிலைக்களன்களாக வேந்தர், சிற்றரசர், நிலப்பிரபுக்கள், கோவில்கள், மதச்சார்புடைய மடங்கள் இடமாகப் பெரும்பாலும் அமைந்துள்ளன.

புலவர்களின் வறுமை, இன்ப துன்ப உணர்வுகள், நேரங்களும் நிகழ்ச்சிகளும் உருவாக்கிய உள்ளத் தூண்டல்கள், புலமைச் செருக்கைப் புலப்படுத்தும் எண்ணம், புலவர்கள் தம்மை புகழ்வதைக் கேட்கும் ஆர்வம், இறைபக்தி, பாட்டு ஒரு விளையாட்டானது, கவிதைக்குரிய பொருளில் கட்டுபாடின்மை போன்றவை முதன்மையான காரணங்களாக அமைந்தன. இத்தனிப் பாடல்களைச் சொந்த அனுபவத்தைப் பாடியவை, சொல்லிப் பாடியவை என்ற இரு வகைகளில் அடக்கலாம்.

## சொந்த அனுபவத்தைப் பாடியவை

அனுபவங்களைப் பாடலாக்கும் முறை யாலேயே இலக்கியம் மனித வாழ்க்கையோடு பெரிதும் நெருக்கம் உடையதாக அமைகிறது. மனிதனின் வாழ்நிலைகளாலும் சூழ்நிலைகளாலும் இவ்வனுபவங்கள் உருவானதால் மக்களிடையே இதனை கேட்பதில் ஆர்வம் மிகுதியாகிறது. புலவர்கள் தங்கள் அனுபவங்களைப் பாடியுள்ள பாடல்களே தனிப்பாடல் திரட்டின் தனித் தன்மைக்குப் பெரிதும் காரணமாகின்றன என்று கூறலாம்.

புலவரின் தற்சார்புத் தன்மை மேலோங்கி நிற்பதால் இப்பாடல்கள் உணர்வோட்டங்களின் பிரதிபலிப்பாக உள்ளன. நிகழ்ச்சிகளோடும் சூழ்நிலைகளோடும் நேரடித் தொடர்பு கொண்ட உணர்ச்சிகளின் வெளிப்பாடாக இருப்பதால் இவை நின்று நிதானித்து செய்யப்படும் படைப்புகள் அல்ல. இவற்றை ஆங்கிலத்தில் உள்ள ‘லிரிக்’ (Lyric) என்னும் தன்னுணர்ச்சிப் பாடல்களோடு ஒப்பிட முடியும். தனிப்பாடலில் பாடும் புலவருடைய உணர்ச்சியோ, உணர்ச்சிக்குக் காரணமான அனுபவமோதான் தலைமையானதாகும். வறுமையின் கொடுமை, பசித்துன்பம், வள்ளல்கள் ஆதரித்தபோது அவர்கள் மீது ஏற்பட்ட மதிப்பு, அவர்கள் ஆதரிக்காத போது ஏற்பட்ட கோபம், ஏழை எளிய மக்கள் தம்மிடம் காட்டிய அன்பின் காரணமாக உண்டாக்கிய இதயக்கசிவு, சமூகக் கொடுமைகளைச் சந்தித்த போது ஏற்பட்ட வெறுப்பு-விரக்தி முதலிய சொந்த அனுபவங்களையும் பிரதிபலிப்பதால் தனிப்பாடல்களைத் தன்னுணர்ச்சிப் பாடல்கள் என்ற பிரிவில் அடக்குவது பொருத்தமானதே ஆகும்.

## சொல்லிப்பாடியவை

தனிப்பாடல் திரட்டில் காணப்படும் பாடல்களில் மற்றொரு வகையே சொல்லிப் பாடியவை. பிறர் கேட்டுக் கொண்டதற்கான வண்ணம் புலவர்களால் பாடப்பட்டவையே இவை. இவற்றுள், கேட்பவர்களை மனத்துள் கருதிக்

கொண்டு பாடப்பட்டனவும் உள்ளன. புலவர்களின் கவித்திறனை வெளிப்படுத்தலே இதன் தலையாய நோக்கமாகும். இவற்றுள் பல புலமைப் போட்டியாலும் புலமைச் செருக்கைப் புலப்படுத்தவும் தோன்றியவையாகும். இத்தகைய பாடல்கள் அவற்றின் பாடும் திறன், சுவை ஆகிய காரணங்களால் வாய்மொழியாகவும் மக்கள் வாழ்வில் இடம்பெற்றன.

சொல்லிப் பாடிய பாடல்களைச் சொல்லிய பொருளைப் பாடியவை, சொல்லிய முறையில் பாடியவை, சொல்லிய பொருளைச் சொல்லிய முறையில் பாடியவை, வினாவுக்கு விடையாகப் பாடியவை, வினாவும் விடையுமாகப் பாடியவை என்ற வகைகளில் பிரிக்கலாம். இவைதவிர சிலேடைப்பாடல்கள், வருக்கப்பாடல்கள், விடுகதைப் பாடல்கள், மடக்குப்பாடல்கள், பொருள்கோள்பாடல்கள், எண்ணலங்காரப் பாடல்கள், திரிபங்கி, நவபங்கி, சத்தபங்கிப் பாடல்கள் எனவும் பல வகைகளில் பாடல்கள் இத்திரட்டில் இடம்பெற்றுள்ளன.

சொல்லலங்காரத் தன்மையுடையவாகி மிகப் பெரும்பாலும் வேடிக்கை, நகைச்சுவை, அறிவுநுட்பம் அல்லது அங்கதப் பொருளை இவ்வகைப் பாடல்கள் கொண்டிருக்கின்றன. தனிப்பாடல் திரட்டில் கீழான உணர்வின் வெளிப்பாடான பாடல்கள் சிலவும் இருக்கின்றன. அப்பாடல்களுக்கு இலக்கியத்தரம் இல்லையாயினும் ஒளிவு மறைவு இன்றி வெளிப்பட்ட புலவரின் மனப்போக்கைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. அக்காலச் சமுதாயநிலையை எடுத்துக்காட்டுவதாக இப்பாடல்கள் அமைந்துள்ளன. நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் செல்வம் நிறைந்தவரின் பலவீனங்களைத் தூண்டிவிடும் படியான சுவைக் குறைவான காமத்துறைப் பாடல்களும் இப்பிரிவில் அடங்கியுள்ளன. மனிதனின் அனுபவங்கள், உணர்ச்சிகள் இவற்றின் தரம் ஒரே தன்மைக் கொண்டனவாக அமைந்திருப்பதில்லை. அவை உயர்ந்தனவாகவும் இழிந்தனவாகவும் இருக்கக்கூடும். இப்பாடல்கள் அவற்றின் வெளிப்பாடுகளாகவும் உள்ளன.

### முடிவாக

- தனிப்பாடல்கள் என்ற அளவில் சங்கப் பாடல்களோடு தனிப்பாடல் திரட்டு பாடல்களும் ஒரு தன்மையானவை என்ற எண்ணம் தோன்றுதல் இயல்பாகும். ஆனால்,
- சங்கப் பாடல்கள் அகம், புறம் என்னும் தெளிவான அடிப்படையில் புனையப்பட்டுள்ளன. தனிப்பாடல் திரட்டு பாடல்கள் மனிதனின் உணர்வு நிலையில் தோன்றிய பாடல்களைக் கொண்டமைந்துள்ளன. இவற்றில் எப்பொருள் பற்றியும் எந்நிலையிலும் பாடும் உரிமை காணப்படுகிறது.
- சங்கப்பாடல்களில் உள்ளடக்கம் கவனத்திற்குரியது. தன்மை நவிற்சியோடு உவமை நலம் சிறக்க பாடுவது பாடுநெறியாகும். தனிப்பாடல் திரட்டு பாடல்களில் பெரும்பாலும் உருவத்திற்கே முதன்மை தரப்பட்டுள்ளது. சொல்லலங்காரங்களும் அணிகளும் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- சங்க அகத்திணைப்பாடல்கள் சுட்டி ஒருவர் பெயர் கொள்ள பெறா பாடல் நெறியாக இருக்க, தனிப்பாடல் திரட்டு பாடல்கள் சிற்றரசர்களும் வள்ளல்களும் அகப்பாடல்களில் நாயகராகி மங்கையர் மனதில் உலாவரும் பாங்கு காணப்படுகிறது.

### துணைநூல் பட்டியல்

[1] அடைக்கலசாமி.எம்.ஆர்., தமிழ் இலக்கிய வரலாறு, ராசிபதிப்பகம், 1996.
[2] இராமசுப்பிரமணியம்.வ.த., தண்டியலங்காரம், முல்லை நிலையம், 2009.
[3] இளமாறன்.பா.,(தொ.ஆ) அறியப்படாத தமிழ் உலகம், பாரதி புத்தகலாயம், மு.ப.2011.
[4] இளவழகன்.கோ.,(பதி.ஆ) தொல்காப்பியம் (பொருளதிகாரம்) செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரை, இரா.இளங்குமரன் வாழ்வியல் விளக்கம், தமிழ்மண் பதிப்பகம், இ.ப. 2009.
[5] கைலாசபதி.க., சமூகவியலும் இலக்கியமும், குமரன் பப்ளிஷர்ஸ், மறுபதிப்பு, 2009.
[6] சிவத்தம்பி.கா., தமிழில் இலக்கிய வரலாறு, என்.சி,பி.எச், இ.ப, 2008.
[7] சிவத்தம்பி.கா., பண்டையத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2005.
[8] சுப்பிரமணியபிள்ளை.கா., தனிப்பாடல் திரட்டு, முதல் தொகுதி, கழக வெளியீடு, 1953.
[9] மாணிக்கம்,புலவர்.அ., தனிப்பாடல் திரட்டு, முதற்பகுதி, முன்னுரை, பூம்புகார் பிரசுரம், 1977.
[10] மாதையன்.பெ., தமிழ்ச் செவ்வியல் படைப்புகள் கவிதையியல் சமுதாயவியல் நோக்கு, என்.சி.பி.எச், மு.ப. 2009.
[11] ராஜ்கௌதமன், தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், விடியல் பதிப்பகம், மு.ப.2008.
[12] விமலானந்தம்.மது.ச., தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், ஐந்திணைப் பதிப்பகம், மு.ப.1987.